Registered as a NewsPaper in Ceyl ★ ★ விலை: சதம் 15

13 SEP 1971 LIBRARY



போன்: 7199
தங்க வைரம்
பொ. அம்பலவாணர்
தங்க வைர
நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்.

# ஈழநாடு

EELA NADU
National Tamil Daily
தேசிய தினசரி
தபால் பெட்டி எண். 49 போன்: 389

WOLSELEY
வூல்சிலி 2"
நீர் இறைக்கும் யந்திரங்கள்
உபகரணங்களுடன்
மலிவான விலையில் கிடைக்குமிடம்
கதிர் ஹாட்வெயர்ஸ்
11/1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7130 தந்தி: KATHIR

மலர் 13 ஆவணி 28 றஜப் 22 (13—9—71) திங்கட்கிழமை இதழ் 214

# அடுத்த ஆண்டிலிருந்து பாரத இலங்கை மின்சார இணைப்பு

## இந்திய அமைச்சர் ராவ் மீண்டும் நவம்பரில் வருகிறார்

கொழும்பு, ஞாயிறு

இலங்கையும் இந்தியாவும் அடுத்த ஆண்டு முதல் மின்சாரத்தாலும் தொடர்பு கொள்ளக்கூடிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் சர்தார் சுவர்ண் சிங்கும் இந்திய அதிகாரிகள் குழுவும் இலங்கைக்கு விஜயம் செய்து சென்றவார இறுதியில் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயகாவுடனும் அமைச்சர்கள் சிலருடனும் நடத்திய பேச்சுவார்த்தைகளும் இதில் ஏற்பட்ட உடன்பாடுகளும் நல்லபடியாகச் செயல்படுமானால் அடுத்த ஆண்டிலிருந்து இந்தியாவும் இலங்கையும் மின்சாரத்தால் இணைந்துவிடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

மகாவலி கங்கைத் திட்டத்தின் ஓர் அம்சமாக உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தில் நாட்டின் தேவைபோக மிகுதியாக உற்பத்தியாகும் மின்சாரத்தை இந்தியாவுக்கு விற்பனை செய்வதுபற்றி முன்னைய 'தேசிய அரசாங்க' காலத்தில் அப்போதைய நீர்ப்பாசன மின்சக்தி அமைச்சர் திரு சி பி டி சில்வாவும் அச்சமயம் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த இந்திய மின்சக்தி அமைச்சர் டாக்டர் கே. எல். ராவும் யோசனை தெரிவித்திருந்தனர்.

இலங்கையும் இந்தியாவும் மின்சாரத்தால் இணைக்கப்படும் திட்டம்பற்றி சென்ற வெள்ளிக்கிழமை சர்தார் சுவர்ண்சிங் அமைச்சர் மைத்திரிபால சேனநாயகாவைச் சந்தித்துப் பேசியபோது மீண்டும் இதுபற்றி ஆராய்ந்தனர்.

மின்சக்தி இணைப்பு பற்றி முன்னர் ஆலோசனை கூறிய இந்திய அமைச்சர் டாக்டர் கே. எல். ராவ் மீண்டும் இவ்வருடம் நவம்பர் மாதத்தில் இங்கு பொறியியலாளர் மாநாட்டில் கலந்து கொள்வதற்கு வருகிறார். அப்போது மின் இணைப்புத் தொடர்பு இறுதி உருவம் பெறுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இரு நாடுகளுக்குமிடையில் மின் இணைப்பு ஏற்பட்டால் இயற்கைக் கோளாறு காரணமாகவோ வேறு காரணமாகவோ மின்சக்தி விநியோகம் இரு நாடுகளில் ஒன்றிலாவது பாதிக்கப்பட்டால் மற்ற நாடு உதவி செய்து நிலைமையை சமாளிக்குமென்று கருதப்படுகிறது. (சி பி ஏ)

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை

## மற்றொரு யந்திரம் பழுது உற்பத்தி பாதிப்பு

மாவிட்டபுரம், ஞாயிறு

காங்கேசன்துறை சிமந்து தொழிற்சாலையில் 4 மாதத்திற்குள் இரண்டாவது முறையாக மின்மோட்டார் பழுதடைந்துள்ளது. இதனால் சிமந்து உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

சிலதினங்களுக்குமுன் 1000 குதிரை சக்தி கொண்ட 3300 வோல்ட் வலுவுள்ள மின்மோட்டரே இப்படிப் பழுதடைந்துள்ளது.

இதற்கு சிலமாதங்களுக்கு முன் இத்தொழிற்சாலையில் உள்ள அதிசக்தி வாய்ந்த மின்மோட்டர் ஒன்று எரிந்து சேதமடைந்ததால் உற்பத்தி பாதிக்கப்பட்டிருந்தபோதும் தொழில் நுட்பவியலாளர்கள் திறமையால் புத்தளம் தொழிற்சாலையில் இருந்து மின் இயந்திரம் ஒன்று எடுத்துவரப்பட்டு இங்கு இணைக்கப்பட்டது. இவ்வியந்திரம் இயங்கி உற்பத்தியைப் பெருக்கும் நேரத்தில் வேறொரு இயந்திரம் பழுதடைந்தது உற்பத்தியைப் பாதிப்பதாக அமைந்துள்ளது.

## ஒரு வாலிபர் மீது நால்வர் மிருகத்தனமான தாக்குதல்

### யாழ். பஸ்நிலையத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், திங்கள்

வீதிவழியேசென்று கொண்டிருந்த வாலிபர் ஒருவரை கட்டை காற்சட்டை அணிந்த 4 பேர் பொது மக்கள் முன்னிலையில் மிருகத்தனமாகத் தாக்கிய சம்பவமொன்று கடந்த வெள்ளிக்கிழமை மாலை யாழ்ப்பாணம் பஸ்நிலையத்துக்கு அண்மையில் நடைபெற்றது.

மதுபோதையில் நின்றதாகக் கூறப்படும் இந்நால்வரும் குறிப்பிட்ட இளைஞரைப் படுமோசமாகத் தாக்கி விட்டு பஸ் நிலையத்துக்கு அழைத்துச்சென்று பொது மக்கள் முன்னிலையிலும் தாக்கினார்களாம். இச்சம்பவங்களை நேரில் கண்ட மற்று பொது ஜனங்கள் யாழ்ப்பாணம் பொலிஸில் புகார் செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் முதலாவது உதவிப் பொலிஸ் அதிபர் இவர்களது புகார்களை பதிவு செய்துள்ளார்.

நால்வரில் ஒருவர் பொலிஸ் என்றும் மூவர் மறியற்சாலை ஊழியர்கள் என்றும் விசாரணையில் தெரியவந்தது.

இதுசம்பந்தமாக விசாரணைசெய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸ் அதிபர் திரு ஆர் சுந்தரலிங்கம் உதவிப் பொலிஸ் சுப்பிரின்டனிடம் கோரியுள்ளார்.

## 1000 பஸ்கள் இந்தியாவிடம் இலங்கை வாங்கும்

கொழும்பு, ஞாயிறு

சுமார் ஆயிரம் பஸ் வண்டிகளை இந்தியாவிடமிருந்து இலங்கை வாங்க விரும்புவதாகத் தெரிகிறது.

பஸ்கள் தவிர கைத்தொழில்களுக்குத் தேவையான இயந்திர சாதனங்கள் உபகரணங்களையும் இந்தியாவிடமிருந்து இலங்கை வாங்கவிருக்கிறதாம்.

இலங்கைக்கு இந்தியா வழங்கியுள்ள புதிய கடன் தொகையான ஆறுகோடி ரூபாய்க்கும் பஸ்களையும் இயந்திர சாதனங்கள், உபகரணங்கள் ஆகியவற்றை வாங்குவதற்கு இலங்கை உத்தேசித்துள்ளதாக அறியப்படுகிறது. (சி.பி.ஏ.)

இந்தியாவுக்கு

## கொப்பரா, தே. எண்ணெய் ஏற்றுமதி அதிகரிக்கும்

கொழும்பு, ஞாயிறு

கொப்பரா, தேங்காயெண்ணெய், காரீயம், ரபர் மற்றும் கைத்தொழில் மூலப்பொருள்களை கூடுதலாக இலங்கையிடமிருந்து வாங்குவதற்கு இந்தியா ஒப்புக்கொண்டிருப்பதாக அறியப்படுகிறது.

'இலங்கையின் உற்பத்திப் பொருள்களைக் கூடுதலாக வாங்குவதற்கு இந்தியா முயற்சி செய்யும்' என்று தான் கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளபோதும் மேற்கூறப்பட்ட பொருள்களைக் கூடுதலாக வாங்குவதற்கு இந்தியா ஒப்புக் கொண்டிருப்பதாக இப்பேச்சுவார்த்தைகளில் சம்பந்தப்பட்ட வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது. (சி.பி.ஏ.)

## 'மனு நிராகரிக்கப்பட்டவர் விஷயத்தில் கவனமெடுப்பேன்'

கொழும்பு, ஞாயிறு

இலங்கை-இந்தியா ஆகிய இரு நாடுகளாலும் பிரஜாவுரிமை மறுக்கப்பட்டவர்கள் பிரச்சினை குறித்து தான் கவனம் செலுத்துவதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு சுவர்ண் சிங் உறுதியளித்துள்ளார்.

பிரஜாவுரிமை நிராகரிக்கப்பட்டவர்கள் பிரச்சினையை எடுத்துக்கூற அமைச்சரைச் சந்தித்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. தொண்டமான் செனட்டர் திரு. எஸ். ஜெகநாதன் ஆகியோர் தலைமையில் சந்தித்த தூதுக்குழுவிடமே அமைச்சர் மேற்கண்டவாறு உறுதியளித்துள்ளார்.

அமைச்சரிடம் மனுக்கள் மறுக்கப்பட்ட மக்களின் பிரச்சினை இத்தூதுக்குழு விளக்கிக் கூறுகையில் இரு நாடுகளுக்குப் பிரஜாவுரிமை கோரி மனுச்செய்த காலஎல்லை சில மாதங்களுக்கு முன்னரே முடிவுற்றது. மேலும் இருநாடுகளாலும் பிரஜாவுரிமை மறுக்கப்பட்டவர்கள் மற்ற நாடுகளில் பிரஜாவுரிமை கோருவதற்கான விதிகளும் இல்லை. இவற்றுள் மற்றநாடுகளில் இவர்கள் பிரஜாவுரிமை

(5-ம் பக்கம் பார்க்க)

## சுவீப் முடிவுகள்

கொழும்பு, திங்

நேற்று அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட 362-வது தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:

1-வது பரிசு
16 A 0271 ரூ 90,970
2-வது பரிசு
31 E 0867 ரூ 36 388
3-வது பரிசு
12 T 0395 ரூ. 9,097

(5ம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

இயந்திரங்கள், இயந்திர உதிரிப்பாகங்கள், உபகரணங்கள், ஒட்டுவேலைகள், பல்லுச்சக்கரம் வெட்டுதல் (Gearwheel cutting) என்ஜினியர்களின் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும் ராதா மெசின் கொம்பனி 95. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3524

காலம் பொருமதியானது. ஒரு பைக்கட் மிக்சலைத் சலவைப்பவுடரில் அநேக துணிகளை சலவைசெய்யலாம் வெற்றுறை ஒன்றை அனுப்பி வெளியீட்டுப் புத்தகங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள். மிக்கலைத் சோப் தொழிற்சாலை, யாழ்ப்பாணம். 3520

## விற்பனைக்கு

மருந்துகள், மருந்துச் சரக்குகள், சித்த ஆயுள்வேத ஆங்கில மருந்துகள் மருந்துச்சரக்குகள் சிறந்த முறையில் மலிவாகக் கிடைக்கும். எஸ் சுப்பிரமணியம் கொம்பனி 53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், 160, செட்டியார் தெரு கொழும்பு 3523

வீட்டுடன் 2பரப்புக்காணி விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவும்: பொ. மாணிக்கவாசகர், 29, செட்டித்தெருவேன், நல்லூர் யாழ்ப்பாணம். 3323

## தேவை

கண்டிப் பகுதியிலுள்ள படமாளிகைக்கு ஆங்கிலம், கணக்கில் அனுபவம் வாய்ந்த ஓர் உதவி மனேச்சர் தேவை பிணைப்பணம் ரூபா 3000/- கட்டவேண்டும். விண்ணப்பிக்கவும் விளம்பர இல 3324 கே/பா ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 3324

## விற்பனைக்கு

சாவகச்சேரி பட்டணத்திலிருந்து 1 1/2 மைலுக்குள் கச்சாய் ரோட்டில் ஒவ்வொன்றும் ஏழு பரப்புக்கொண்ட சிறந்த கட்டிடம் கொண்ட தென்னந்தோட்டம் தம்பு தோட்டத்திற்கு எதிராகவுள்ளது. நல்ல தண்ணீர், கட்டிடத்திற்கோ அல்லது விவசாயத்திற்கோ ஏற்றது. அருள் நதாணியல், 25, செம்மணி வீதி, நல்லூர். 3555


## சங்கம் அமைத்தனர்

மட்டக்களப்பு, ஞாயிறு
கிழக்கிலங்கைக் கல்விப் பகுதி ஆய்வுகூடப் பரிசாரர் தமக்கென ஓர் சங்கம் அமைத்துள்ளனர். இச்சங்கத்தின் போஷகராக வட்டாரக் கல்வி அதிகாரி திரு இ ஜே சற்குணராசாவும் தலைவராக: திரு இ வேதநாயகம், உபதலைவராக: திரு தாமோதரமும், காரியதரிசியாக திரு சுந்தரராசாவும் தனாதிகாரியாக ஜனாப் எம் ஐ எம் காமூஸிம் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.


மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30 6 30 10-00 சனி, ஞாயிறு 10-30
ஜெமினி—சரோஜாதேவி ரவிச்சந்திரன்—பாரதி நடித்த
சிநேகிதி

ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள், சனி, ஞாயிறு 4 காட்சிகள்
ஜெமினி - சரோஜாதேவி நடித்த
சிநேகிதி

4—வது ஜனத்திரள் வாரம்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
பி. ப. 2-30 மாலை 6-30 இரவு 10-00
மற்றும்
கெப்பிட்டல் — பிளாஸா திரைகளில்





நடிகர் திலகம்
சிவாஜி கணேசன்
(3 வேடங்களில்)
ஜெயலலிதா
நாகேஷ், நம்பியார், சுந்தரராஜன் நடித்த
தெய்வ மகன்

லிடோ [யாழ்நகர்]
(காலை 10-00 பி. ப. 2-00 மாலை 6-00, இரவு 9-30.)
★ ஆனந்தன் ★ ஹேமலதா
அசோகன் ★ காமினி ★ ராம்தாஸ்
நடித்த
விஜயபுரி வீரன்
[புத்தம் புதிய கொப்பி]


# "வடக்கில் புற்றுநோய்சிகிச்சை நிலையம் அவசியம்"

மாவிட்டபுரம் ஞாயிறு
வடக்கில் புற்றுநோய் சிகிச்சை நிலையமொன்றை அமைத்து இப்பகுதியிலுள்ள ஏழைமக்களுக்கு உதவும்படி அரசாங்கத்தை வற்புறுத்தும் வகையில் வடபகுதியிலுள்ள சகல உள்ளூராட்சி மன்றங்களும் ஏகமனதாக தீர்மானங்களை நிறைவேற்ற வேண்டுமென தெல்லிப்பளை கிராமசபைத் தலைவர் திரு எம். சிதம்பரநாதன் கோரிக்கைவிடுத்திருக்கிறார்

வடக்கிலுள்ள சகல உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களுக்கும் அவர் அனுப்பியுள்ள வேண்டுகோள் ஒன்றில் தெரிவித்திருப்பதாவது:-

வடமாகாணமக்களின் நலன் கருதியும் முக்கியமாக யாழ் ஏழைமக்களின் நன்மைகாகவும் புற்று நோயினால் வருந்திக்கஷ்டப்படும் நோயாளிகளின் சுபீட்சத்திற்காகவும் யாழ்ப்பாண அரசினர் வைத்தியசாலையில் புற்றுநோய் சிகிச்சை நிலையமொன்று அவசியம் திறவைப்படவேண்டுமென்ற முக்கியத்துவத்தை வலியுறுத்தி வடமாகாணத்திலுள்ள சகல உள்ளூராட்சி மன்றங்களும் ஏகோபித்த முறையில் தீர்மானம் இயற்றி சுகாதார அமைச்சருக்கு அனுப்பி வைப்பதுடன் தொடர்ந்தும் இது விஷயத்தில் கூடிய கவனம் எடுக்க வேண்டும்.

வடபகுதியில் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டவர்கள் இங்கிருந்து வெகு தொலைவிலுள்ள மாகம ஆஸ்பத்திரிக்கே அனுப்பப்படுவதாயும், அங்கு செல்வதற்கு வசதியீனம் காரணமாகப் பல புற்று நோயாளரும் நோயை அதிகரித்துக்கொள்வதாயும் எனவே வடபகுதியில் புற்றுநோய் சிகிச்சை நிலையம் அமைப்பதன் மூலம் புற்றுநோய்க் கொடுமையை ஒழிக்கலாமென்றும் திரு சிதம்பரநாதன் தமது வேண்டுகோளில் கேட்டுள்ளார்.

## 3 உப தபால் நிலையங்கள் திறக்கப்படும்

மன்னார், ஞாயிறு
மன்னாரில் மூன்று புதிய உபதபால் நிலையங்கள் விரைவில் திறக்கப்படவிருக்கின்றன, மன்னார் கடைத்தெருவிலும் தோட்டவெளியிலும் வேப்பங்குளத்திலுமாக இம்மூன்று நிலயங்களும் அமையும். இம்மூன்று இடங்களிலும் உபதபால் நிலையங்களின் அவசியம்பற்றி ஜனாப் என். எம் ஏ' காதர் தபால் அமைச்சருடன் நேரில் சந்தித்துப் பேசியபோது அமைச்சர் இதற்குச் சம்மதம் தெரிவித்தார்.

## ஜேர்மனிசென்றார்

மட்டக்களப்பு, ஞாயிறு
கிழக்கு ஜேர்மனியில் பூகோளவியல் பொறியியலாளர் பயிற்சி பெறுவதற்கான புலமைப் பரிசில் பெற்று திரு. க. வை. மோகனதாஸ் அங்குசென்றுள்ளார். கிழக்கு ஜேர்மனியில் இவர் 5 ஆண்டுகள் பயிற்சி பெறுவார். யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவரான இவர் மட்டக்களப்புக் கச்சேரியின் வருமானவரிக் கிளையைச் சேர்ந்த திரு கே. வைரமுத்து தம்பதிகளின் சிரேஷ்டபுதல்வராவார்.

## 'பாடும்மீன்' வெற்றி

மட்டக்களப்பு. ஞாயிறு
மட்டக்களப்பு மாவட்ட உதைபந்தாட்டச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட இவ்வாண்டுக்கான வேதாரணியம் வெற்றிக்கேடய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பாடும்மீன் கழகம் கேடயத்தைத் தட்டிக்கொண்டது. டைமேசஸ் விளையாட்டுக்கழகம் பாடும்மீன் விளையாட்டுக் கழகம் பறங்கியர் விளையாட்டுக் கழகம் மைக்கல்-மென் விளையாட்டுக்கழகம் ஆகிய கழகங்கள் இச்சுற்றுப்போட்டியில் கலந்துகொண்டனர்.

உதைபந்தாட்டம்

## 'பாடும்மீன்' வெற்றி

யாழ்ப்பாணம், திங்கள்
யாழ். உதைபந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில், யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களிடையே நடைபெற்று வரும் 'நொக் அவுட் உதைபந்தாட்டப் போட்டி'யில் குருநகர் பாடும்மீன் கழகம் வெற்றி பெற்றுள்ளது

பாடுமீன் கழகத்துக்கும், வல்வெட்டித்துறை புளூஸ் கழகத்துக்குமிடையில் முதலில் நடைபெற்ற போட்டியில் வல்வெட்டித்துறைக் கோஷ்டி வெற்றி பெற்றிருந்தது. இவ்வெற்றியை ஆட்சேபித்து பாடும்மீன் கழகம் செய்த பூசாரை மேற்படிச் சங்கம் ஏற்றுக் கொண்டதால், இவ்விரு கழகங்களும் மீண்டும் மோதிக்கொண்ட போட்டியில் பாடுமீன் கழகம் 3—0 கோல்களால் வெற்றி பெற்றது.

## பொம்பஸ் வெற்றி

வதிரி பொம்பஸ் விளையாட்டுக் கழகத்துக்கும், தெல்லிப்பளை கிறஸ்கோப்பஸ் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் பொம்பஸ் கழகம் 3—1 கோல்களால் வெற்றி பெற்றது.

இவ்விரு போட்டிகளும். யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. (தே நி)

## பொன்னாலை தேர்

சுழிபுரம், ஞாயிறு
பொன்னாலையில் நடைபெற்ற ஸ்ரீ வரதராசப் பெருமாள் கோவில் தேர் திருவிழா முதல் முறையாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினரால் அஞ்சல் செய்யப்பட்டது. இம்முறைவழமையிலும் அதிகமான பக்தர்கள்விழாவில்கலந்துகொண்டார்கள் போதிய பஸ் சேவை இருக்காததால் மூளாய், பொன்னாலைசந்தி, சுழிபுரம் போன்ற இடங்களுக்கு மக்கள் வெயிலில் கால்நடையாகவே சென்றனர்.

## இளைஞர் கழகம் வெற்றி

சுழிபுரம், ஞாயிறு
வலிகாமம் மேற்கு விளையாட்டுக்கழகங்களின் இரண்டாம் பிரிவினரின் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் முதலாட்டத்தில் சித்தன்கேணி இளைஞர் கழகத்தினர் வெற்றிபெற்றனர். சுழிபுரம் குட்டிக் ஸ்ரார்ஸ்' கோஷ்டிக்கும் சித்தன்கேணி இளைஞர் கழகக் கோஷ்டிக்குமிடையே சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் போட்டி நடைபெற்றது. சித்தன்கேணி கோஷ்டியினர் இரண்டு கோல்களையும் சுழிபுரம் குட்டிஸ்ரார் ஒரு கோலையும் போட்டனர் திரு ஜே சண்முகநாதன் மத்தியஸ்தம் வகித்தார்


வெஸ்லி சினிமா
மானிப்பாய்
பி ப 2-30. 6-30, 10-00
சிவாஜி - கே. ஆர். விஜயா
ஊட்டிவரை உறவு

நாகம்ஸ் சினிமா
கன்னாகம்
தினசரி: 4-30 மட்டும் சனி, ஞாயிறு 10-30
DEATH LAID AN EGG
தினசரி 6-30, 9-45 சனி, ஞாயிறு 2-30
ஆனந்தன்-ராமதாஸ் நடித்த
வீரத்திருமகன்

REGAL Jaffna
Daily 5-15 & 7-15 p. m.
Walt Disney's
CHARLIE THE LONESOME COUGAN AND DISNEY LAND
(color)

தினசரி பி.ப. 2-00, 9-45
ஏ. பி. நாகராஜன்— ஜி. வரலக்ஷ்மி நடித்த
ஏழு பிள்ளை நல்லதங்காள்
புதிய கொப்பி

வின்சர் [யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
★ ஜெமினிகணேசன்
★ கே. ஆர். விஜயா
நாகேஷ், பி. எஸ். வீரப்பா, நிர்மலா
நடித்த
சங்கமம்

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி காலை10-30.பி.ப 2-30,மாலை6-30 இரவு10மணி
பின்னணிப் பாடகர்கள்
★ ரி. எம். சௌந்தரராஜன்
★ ஏ. எல். ராகவன்
ராஜஸ்ரீ — விஜயகுமாரி — நாகேஷ்
நடித்த
கல்லும் கனியாகும்

## முன்னுள் ரஷ்யப் பிரதமர்

# குருஷேவ் மறைவுக்கு உலகத் தலைவர்கள் நினைவு அஞ்சலி

## இன்று இறுதிச் சடங்குகள்

மாஸ்கோ, செப். 12

முன்னுள் ரஷ்யப்பிரதமர் திரு. நிகடோவ்குருஷேவின் மறைவுக்கு உலகத் தலைவர்கள் நினைவு அஞ்சலி செலுத்தியிருக்கிறுர்கள்.

மனிதகுலத்தின் மேன்மையையே கருத்திற் கொண்டு செயலாற்றிய மாபெரும் தலைவர் என்றுபல உலகத் தலைவர்கள் புகழ் அஞ்சலி செலுத்தியுள்ளார்கள்.

இருபதாம் நூற்ருண்டில் பிரபல தலைவர் குருசேவ் என்றும் அஞ்சலி செலுத்தியிருக்கிறுர்கள்.

நேற்று ரஷ்ய ஆஸ்பத்திரியொன்றில் திடீர் மாரடைப்பினுல் காலமான திரு குருஷேவின் இறுதிச் சடங்குகள் நாளை நடைபெறுமென அறிவிக்கப்படுகிறது.

குருஷேவுக்கு வயது 77 இயூபா ஏவுகருவி நெருக்கடியின்போது மனிதகுலத்தின் மேன்மையையே உயர்வாகக் கருதிச் செயலாற்றினுர். 1958-ம் ஆண்டிலிருந்து 1964-ம் ஆண்டுவரை பதவி வகித்த இவர் ஐ நா சபையில் தான் அணிந்திருந்த காலணிகளைக் கழற்றிமேசையில் அடித்ததன் மூலம் மேலும் பிரபலமடைந்தார்.

1960-ம் ஆண்டு இந்தப் பரபரப்பான சம்பவம் நடந்தது.

அமெரிக்க வெள்ளை மாளிகைக்கும் கிரெம்ளினுக்கும் இடையில் தொலைபேசித் தொடர்பு ஏற்படுத்தப்பட்டது. இவர் காலத்தில் தான் மிக அவசரமான பிரச்சினைகள் குறித்து பேசுவதற்காக இது ஏற்படுத்தப்பட்டது.

இலங்கையில் திருமதி ஸ்ரீமாவோ பிரதமராக இருந்த காலத்தில் ரஷ்யாவுக்கு விஷயம் செய்த போது அங்கு குருஷேவ் பிரதமராக இருந்தார்.

ஸ்ராலினின் இறுக்கமான கட்சிக் கொள்கைகளைத் தளர்த்தி உலக நாடுகளுடன் நட்புறவுக் கொள்கை இவர் காலத்திலேயே ஏற்படுத்தப்பட்டது. இவருடைய முடிவுகளுக்கு மக்களிடையே உற்சாகமானவரவேற்புக் கிடைத்தது.

பதவியிலிருந்து இறக்கப்பட்ட பின்னர் இவர் சாதாரண வாழ்க்கையையே நடத்தி வந்தார். பென்ஷன் பெற்றுவந்த இவர் பண்ணையில் தங்கியிருந்தார்.

கடைசியாக நடந்ததேர்தலின்போது இவர் வாக்களிக்க வந்தபோது காணப்பட்டார்.

## விண்வெளியில் பஸ்சேவை

லண்டன், செப் 12

இன்று விண்வெளியில் தன்னியக்க விண்கலங்களும் மனிதர்களைக் கொண்ட விண்கலங்களும் சர்வசாதாரணமாகச் சென்று சந்திரனையும் செவ்வாய் மண்டலத்தையும் ஆராயும் பணியில் மிக மும்முரமாக ஈடுபட்டு வருகின்றன. செல்வாக்கு மிக்க நாடுகள் பலகோடி பவுண்களைச் செலவிட்டு இவ் விண்வெளிப் பிரயாணங்களை நடத்துகின்றன.

இவற்றைவிட வேறு சில நாடுகளும் விண்வெளிப் பிரயாணத்திலும் விண்வெளியின் மர்மங்களைத் துலக்கும் ஆராய்ச்சிகளிலும் பெரும் ஆர்வம்காட்டி வருகின்றன. குறைந்த செலவில் சிறிய திட்டஅளவில் ஆராய்ச்சிகளை மேற்கொண்டிருக்கும் இந் நாடுகளுக்கு விஞ்ஞான பஸ்சேவையொன்றை மிக வெற்றிகரமாக அளித்து வருகிறது ஒரு சிறிய ராக்கெட். பென்சில் போன்ற இந்த சிறிய ராக்கெட், கடந்த பதின்மூன்று வருடங்களாக பிரிட்டிஸ் அவுஸ்திரேலிய சர்வகலாசாலைகள் ஆரம்பித்து நடத்தி வரும் ஆராய்ச்சிப் பரிசோதனைகளுக்கு உதவிவருகிறது.

விண்வெளி ஆராய்ச்சிகளை நடாத்தப் பல விஞ்ஞான சாதனங்களை இவ் விண்வெளிக்குஅனுப்பி அவற்றை அங்கு இயக்கவைத்து அவைதரும் தகவல்களைச் சேகரித்து மீண்டும் பூமிக்கு அனுப்புதல் அவசியம். இந் நுணுக்கமான வேலையைத் தான் 'ஸ்கைலாக்' என்றழைக்கப்படும் இந்த ராக்கெட் செய்கிறது. நிலத்திலிருந்து 100 மைல்களுக்கு மேல் விஞ்ஞான சிப்பங்களை எடுத்துச்செல்லும் ஆற்றல் இந்த ஸ்கைலாக்கிற்கு உண்டு.

சென்றவருட முற்பகுதியில் 'ஸ்கைலாக்' இருபத்தி மூன்று தடவை விண்வெளிக்குச் சென்று ஐம்பத்தொரு பலதரப்பட்ட பரிசோதனைகளுக்கு அவசியமான சாதனங்களை இயக்கிவைத்ததாம்.

# 'ஆட்சியைஒப்படைக்காவிட்டால் கி. வங்க நிலைமையே ஏற்படும்'

## பூட்டோ எச்சரிக்கை

கராச்சி, செப் 12

'மக்களால் தெரிவுசெய்யப்பட்ட நாட்டின் பிரதிநிதிகளிடம் ஆட்சிப்பொறுப்பை ஒப்படைக்காவிட்டால் கிழக்குவங்க நிலைமையே மேற்கிலும்ஏற்படும்' என்று மக்கள் கட்சித் தலைவர் பூட்டோ எச்சரித்தார்.

கராச்சியில் நடந்த 23வது ஆண்டு ஜின்னு நினைவுவிழாவில் பூட்டோ இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

நாட்டின்பிரதிநிதிகளிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைக்கவேண்டுமென்ற தமது நிலையில் எவ்வித மாற்றமுமில்லை என்று பூட்டோ தெரிவித்தார்.

ராணுவம் மக்களின் ஊழியர்களே தவிர அவர்களை அழித்து ஒழிக்கும் எஜமானர்களல்லர் என்றும் சொன்னுர்.

அதிகாரவர்க்கத்தின் ஆட்சியினுலேயே பாகிஸ்தான் இந்த நிலைக்கு வந்தாக பூட்டோ பேசகையில் குறிப்பிட்டார்.

......

## பூர்த்தி விழா

யாழ்ப்பாணம், திங்கள்

கடந்த மூன்று மாதமாக தொடர்ந்து நடைபெற்று வந்த கந்தபுராண பாராயணப் பூர்த்தி விழா இன்று நடைபெறும்.

நாளை செவ்வாய்க்கிழமை பாராயண பூர்த்தி விழாவை யொட்டி மகேஸ்வர பூஜையும் நடைபெறவுள்ளன. இப்பாராயண விழாவில் தென்மராட்சி பிரபலம் பெற்ற அறிஞர்கள் கலந்து கொண்டு விரிவுரை நிகழ்த்துவர்.

(கு. வி. ம.)

## 'பஸ சேவையை சீர்திருத்த வேண்டும்'

யாழ்ப்பாணம், திங்கள்

கொடிகாமம் - யாழ்ப்பாணம் இ.போ.ச. பஸ்சேவை முற்ருக சீர்படுத்தப்பட வேண்டுமெனக்கோரி மகஜர் ஒன்றை தென்மராட்சி பிரயாணிகள் சங்கம் வடபிராந்திய இ. போ. ச. அதிகாரிக்கு அனுப்பிவைத்துள்ளது.

இம்மகஜரில் வழியிற் பிரயாணிகள் குறிப்பாக 8-8-71-ல் காலை 7 மணி தொடக்கம் 9 வரைகாத்து நின்றும் பஸ்ஸில் ஏற முடியவில்லையென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒருவாறு பாடசாலைப்பிள்ளைகளுக்கு வசதிசெய்யப்பட்டபோதிலும் ஏனையவர்களை வீதியில் செல்லுகின்ற பஸ்கள் புறக்கணிப்பதுமோல் அதிக பிரயாணிகளுடன் செல்லுவதாகவும் மேலும் மகஜரில் விளக்கப்பட்டுள்ளது. (கு வி ம)

......

## வட்டுக் கிழக்கு அறிவொளி மன்றம்

யாழ்ப்பாணம், திங்கள்

வட்டுக்கோட்டை கிழக்கு அறிவொளி மன்றத்தின் புதுவருட உத்தியோகஸ்தர் தெரிவில் மன்றத்தின் தலைவராக திரு. சு. கணேஷ் மீண்டும் ஏகமனதாகத் தெரியப்பட்டார். செயலாளராக செ. தம்பிமுத்துவும், பொருளாளராக நா. பரமசிவமும் தெரிவுசெய்யப்பட்டனர். 5 பேர் கொண்ட நிர்வாக சபையும் அமைக்கப்பட்டது.

## ஆந்திரா முதல்வர் ரெட்டி ராஜினுமா செய்கிறுர்

விஜயவாடா, செப். 12

ஆந்திரா முதல்வர் திரு. பிரமானந்தரெட்டி தமது பதவியைராஜினுமாச்செய்ய முடிவுசெய்துள்ளார். பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் வேண்டுகோளை அடுத்து அவர் தமது முதல்வர் பதவியை ராஜினுமாச் செய்யப்போகிறுர்.

நேற்றிரவு பிரதமர் இந்திராவைப் புதுடில்லியில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் இந்த முடிவை திரு. பிரமானந்த ரெட்டி எடுத்தார்.

தமது விருப்படி ஆந்திரா முதல்வர் தமது பதவியை ராஜினுமாச்செய்த முன்வந்ததை பிரதமர் இந்திரா ஓர் அறிக்கையில் பாராட்டியுள்ளார்.

திரு. பிரமானந்த ரெட்டிக்கு வயது 62. ஆந்திராவின் முதல்வராக ஏழரை வருடகாலம் பதவி வகித்துள்ளார். 1964-ம் ஆண்டு திரு. பிரமானந்த ரெட்டி பதவி ஏற்ருர் திரு. சஞ்சீவரெட்டியிடம் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

இரண்டொருநாளில் திரு. பிரமானந்தரெட்டி தமது பதவியை ராஜினுமாச் செய்வார் என அறிவிக்கப்படுகிறது.

## "பங்களாதேச விடுதலைப்போர் மேற்குடன் இணைந்தது"

கோட்டை, ஞாயிறு

"கால் நூற்ருண்டு காலமாக பங்களா தேசத்தை காலனியாக வைத்துச் சுரண்டி கொழுத்த மேற்குப் பாகிஸ்தான் ஆளும் வர்க்கமான ராணுவவாதிகளும், நிலப்பிரபுத்துவ வாதிகளும், தொழிற்துறை வர்க்கமும் ஜனநாயக தீர்ப்புக்கு தலைவணங்கி அதிகாரத்தை ஒப்படைக்கத்தயாராயில்லை. ஆகவேதான் பங்களாதேசத்தின் மீது ராணுவ அட்டூழியம் கட்டவிழ்க்கப்பட்டுள்ளது. இரண்டாவது அடி மேற்குப் பாகிஸ்தான் மக்களின் மீது நிச்சயம் விழும். இதற்கான அறிகுறிகள் தோன்றிவிட்டன. ஆகவே பங்களா தேச மக்களின் விடுதலைப் போராட்டத்துடன் மேற்குப் பாகிஸ்தான் மக்களின் விடுதலைப் போராட்டமும் இணைந்திருக்கிறது"

இவ்வாறு கூறினுர் மேற்குப் பாகிஸ்தான் வாசியும், லண்டனில் இயங்கும் வங்காளத்துடன் ஒருமைப்பாட்டுக்கான மேற்குப் பாகிஸ்தானியர்களின் கமிட்டியின் தலைவருமான முஹம்மத் ஆரிஃப். இலங்கை தொழிற்சங்கத் தலைவர்களுடன் நடத்திய கலந்துரையாடல் ஒன்றின் போது இப்படிச் சொன்னுர்.

பங்களா தேசத்துடன் ஒருமைப்பாட்டுக்கான இலங்கைக் கமிட்டி கொழும்பு நிப்போன் ஹோட்டலில் ஏற்பாடு செய்திருந்த சந்திப்புக்கு கமிட்டியின் தலைவர் மாத்தறை சந்தாராம அடிகளார் தலைமைதாங்கினுர்.

இங்கிலாந்து ஸரே சர்வகலாசாலையின் பொருளியல் பேராசிரியராக கடமையாற்றும் ஆரிஃப் அவர்கள் ஒரு தொழிற் சங்கவாதியுமாவார். 1960ம் ஆண்டு கராச்சி முனிசிபல் சபை தொழிலாளர் சங்கத்தின் பொதுக் காரியதரிசியாகவும் அவர் பணியாற்றியுள்ளார். லண்டனிலிருந்து வெளியாகும் "ஜெத்தோ ஜிஹாத்" (போராட்டம்) என்ற ஏட்டின் ஆசிரியராகவும் உள்ள ஆரிஃப் இலங்கையில் பங்களாதேச போராட்டத்துக்கும், மேற்குப் பாகிஸ்தான் மக்களின் ஜனநாயக போராட்டத்துக்கும் ஆதரவு திரட்டும் முகமாக அரசியல், தொழிற்சங்க சமூக மற்றும் பிரமுகர்களை கடந்த ஒரு வார காலமாக சந்தித்திருக்கிறுர்.

"பாகிஸ்தானில் ராணுவம் ஒரு குட்டி வர்க்கமாகி விட்டது. ராணுவ ஆட்சியின் கீழ் கிழக்கு வங்காளம் தாட்சண்யமின்றி சுரண்டப்பட்டது. இதே கதியைத் தான் மேற்குப் பாகிஸ்தானின் சாதாரண மக்களும் அனுபவித்தனர். இன்று பாகிஸ்தான் 20 குடும்பங்களின் குரங்குப் பிடியிலுள்ளது.

"பங்களா தேசத்தில் தோன்றிவிண்டு வரும் ஆளும் வர்க்கம் பொருளாதார நெருக்கடிக்கும் முகம் கொடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது. இதன் எதிரொலி மேற்குப் பாகிஸ்தானில் ஏற்கனவே ஒலிக்கிறது. இதிலிருந்து ஆளும் வர்க்கத்துக்கு கதி மோட்சம் கிடையாது. ஆகவே சுமையை சாதாரண மக்கள் மீது திணிக்க முற்

(4ம்-பக்கம்பார்க்க)

# "பரதக்கலை உலகமெங்கும் பரவிவிட்டது"

— கி. வ. ஜ.

யாழ்ப்பாணம், திங்கள்

'பரதநாட்டியக்கலை பாரதத்திற்கு மட்டும் சொந்தமானதன்று. இன்று உலகம் முழுவதும் பரதநாட்டியக் கலை இடம்பெற்றுள்ளது. பாரிஸ் நகரில் இலங்கையைச் சேர்ந்த ஆனந்தவல்லி என்பவர் பரதநாட்டியமாடிய போது அந்த நாட்டவர்களே அதனைப் பார்த்து ரசித்து மகிழ்ந்தார்கள்.'

யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் குமாரி ஜெயந்தினி பூபாலசிங்கத்தின் பரதநாட்டிய அரங்கேற்றத்திற்கு தலைமை தாங்கிய தமிழ் அறிஞர் கி. வா. ஜெகந்நாதன் பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

பரதநாட்டிய அரங்கேற்ற விழாவிற்கு பெருந்திரளான மக்கள் சமுகமளித்திருந்தனர். திரு கி. வா. ஜெகந்நாதன், சித்தூர் சுப்பிரமணியம், திரு. சின்னத்துரை, வண. மதுரநாயகம் உட்பட பலர் குமாரி ஜெயந்தினியை வாழ்த்திப் பரிசுகள் வழங்கினார்கள்.

குமாரி ஜெயந்தினி தமது குருவாகிய திருமதி ஞானமணி செல்லையாவிற்கு மாலை சூட்டி வணங்கினார்.

திரு ஜெகந்நாதன் மேலும் கூறியதாவது:- கலைவளம் மிக்க உலகில் இருக்கின்றோம். அற்புதமான நடனத்தில் நம்மை மெய்மறந்து இருக்கிறோம். "கலைமகள் தொண்டனான நான் இன்று கலையின் மகளான ஜெயந்தினியை வாழ்த்துவதற்கு வந்திருக்கிறேன் இடமோ அழகானது இன்றைய நாளும் பொருத்தமானது. கிருஷ்ண ஜெயந்தி தினமான இன்று ஜெயந்தியின் அரங்கேற்றம் பொருத்தமானது. பாரதியின் திருநாளான இன்று பாரதிகளான்ற மாணவியின் அரங்கேற்றம் இடம்பெறுகிறது இதுமிகப் பொருத்தமானது இது இறைவன் திருவருளினால் தான் நடந்தது. தமிழ்நாட்டில் பல கலைகள் வளர்ந்து வருகின்றன. உலகம் முழுவதிலும் பலகலைகள் வளர்ந்து வருகின்றன. நடன, நாடக, இசைக்கலை தமிழ் நாட்டிற்கே சொந்தமானதாக இருந்தபோதிலும் இன்று உலகெங்கும் வளர்ந்து வருகிறது.

மனித சமுதாயத்தில் பல வளங்களும், தொழில்களும் சமய வழிபாடும் நிறைந்திருந்தாலும், கலை இல்லாவிட்டால் இன்பமிருக்காது போய்விடும் உலகம் முழுவதும் கலை இருந்தாலும் தண்டமிழ் நாட்டிலே பரதநாட்டியக்கலை சிறப்படைந்து வருகிறது. இதனைப் பார்த்து உலகமே அதிசயிக்கிறது தெய்வங்களே நடனத்தில் ஈடுபாடு உள்ளவர்களாக இருப்பதைக் காண்கிறோம், கிருஷ்ணன், முருகன், துர்க்கை, நடராஜன் எல்லாரும் நடனமாடினார்கள். ஆண்டவன் நாமத்தை சொல்லாத கீர்த்தனம் போக்கிரித்தனமாகும். இக்கலையை பக்தியோடு பயின்றால்தான் முன்னேறலாம். மனிதன் வாயால் சொல்ல முடியாததை குறிப்பாகக் காட்டக்கூடிய கலைதான் பரதநாட்டியக்கலை. எந்த வேலையென்றாலும் இறைவன் திருவருள் இல்லாவிட்டால் அது நிறைவேறாது.

பரதம் என்ற சொல், ப, ர, த என்ற மூன்று சொல்லில் பிறந்ததாகும். அதாவது பாவம், ராகம், தாளம் ஆகியவற்றைக் குறிக்கும், வெறும் உடம்பு அசைவில் காமல் உள்ளக்கருத்தை, குறிப்பை அசைவில் அபிநயப் பிடிப்பில் வெளிக்காட்டுவதுதான் இக்கலையில் சிறந்த அம்சமாகும். இடம் காலம் கடந்து மனிதனின் மொழி கடந்து இக்கலை இன்று உலகமெங்கும் பரவியுள்ளது'

பண்டிதர் க. பி முருகேசு வரவேற்புரை நிகழ்த்தினார்.

......

### இவர்களுக்கு

## கொழும்பில் படிக்க சந்தர்ப்பம்

கோட்டை, ஞாயிறு

கிராமப்புற மாணவர்களுக்குக் கொழும்பிலுள்ள பிரபல்யமான பாடசாலைகளில் கல்வி பெறவசதி செய்து கொடுக்கப்படவுள்ளது. இதற்காக 5-ம் வகுப்பில் ஒரு போட்டிப்பரீட்சை கல்வி அமைச்சினால் நடத்தப்படும் இப்பரீட்சையில் திறமையாகச் சித்தியெய்தும் மாணவர்கள் மேற்படி பாடசாலைகளில் 6 ம் வகுப்பில் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

......

## மனைவி மரணம் கணவன் கைது

யாழ்ப்பாணம், திங்கள்

மன்னார் முருங்கனைச் சேர்ந்த பிரான்சிஸ் திரேசா என்ற இளம்பெண் அடிகாயங்களினால் மரணமானார். கையாலும் காலாலும் அடித்ததன் விளைவாகவே அவர் மாண்டிருக்கவேண்டுமென விசாரணையின்போது தெரியவந்துள்ளது.

சந்தேகத்தின்மீது திரேசாவின் கணவர் செபமாலை கைது செய்யப்பட்டுள்ளார். மரணவிசாரணையும் பிரேத பரிசோதனையும் நடைபெற்றது. மன்னார்ப் பொலிசார் தொடர்ந்து புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

......

### மனு...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

சேரவும் இயலாதிருக்கிறது எனத் தெரிவித்தனர்

மேற்படி தூதுக்குழுவின் சந்திப்பின் போதும் பத்திரிகையாளர் மகாநாட்டிலும் அமைச்சருடன் இந்தியத் தூதுவரும் அமைச்சருடன் வந்த இந்திய அதிகாரிகளும் பிரசன்னமாயிருந்தனர்.

(சி பீ ஏ)

# பெண்களின் சாதனைக்கு நல்லூர் எம். பி. பாராட்டு

குருநகர், ஞாயிறு

"இலங்கைக்குத் தேவையான உற்பத்திப் பொருட்களான மிளகாய், கிழங்கு, வெங்காயம் ஆகிய உப உணவுப் பொருட்களை வடபகுதி போதியளவு விளைவிப்பதைக் காண நாம் மகிழ்ச்சியடையாமல் இருக்கமுடியாது இந்த உற்பத்தியில் பங்கு கொண்டு அந்த உழைப்பின் வெற்றியைக் கொண்டாடுகின்ற திருநெல்வேலி இளம் விவசாயிகள் கழகத்தினரின் ஆண்டுவிழாவில் கலந்து உரையாற்றும் பாக்கியம் கிடைத்ததையிட்டு நான் பெருமைப்படுகிறேன்."

இவ்வாறு திருநெல்வேலி இளம் விவசாயிகள் கழகத்தின் 12வது ஆண்டு விழாவில் கலந்து சொற்பொழிவாற்றிய நல்லூர் எம். பி. திரு. சி. அருளம்பலம் குறிப்பிட்டார்.

மேற்படி கழகத் தலைவி செல்வி சி அருள்மணிதேவி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் யாழ்ப்பாண மேயர் திரு அல்பிரட் துரையப்பா, உதவி விற்பனை அபிவிருத்தி ஆணையாளர் திரு. த. சிவசிதம்பரம் மற்றும் விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

திரு. அருளம்பலம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது!

"ஆண்களும் பெண்களும் இந்த நாட்டின் உற்பத்தியில் சரிசமமாக உழைத்து பங்கெடுக்கின்றனர் என்பதை இந்தக் கழகம் எடுத்துக்காட்டியது மட்டுமல்ல, ஒரு பெண்மணியின் தலைமையில் பல சாதனைகளை நிலைநாட்டியிருப்பதைக் காண இப்பகுதி மக்கள் மகிழ்ச்சியடையாமல் இருக்க முடியாது.

உத்தியோக மோகம் கொண்டு திரியும் வாலிபர்கள் இன்னும் சில காலத்தில் விவசாயம் செய்யும் இப்பெண்மணிகளைப் பின்பற்றாமல் இருக்கமுடியாது. இப்பகுதி மக்கள் குறிப்பாக இளைஞர்கள் விவசாயத்தில் ஈடுபட்டு மாதிரிக் கமங்களை ஏற்படுத்தினால் நாம் அரசாங்கத்தின் உதவிகளை எடுத்துத் தர ஆயத்தமாக இருக்கிறோம்"

# 'பாரதியாருக்கு இந்தியா தலைவணங்குகிறது'

— டாக்டர் கருணாநிதி

சென்னை, செப் 12

புரட்சிக்கவி பாரதி விடுதலைப் போராட்டத்தில் ஆற்றிய பெரும்பங்குக்கு இந்திய மக்கள் என்றும் அவருக்குத் தலைவணங்கிக் கொண்டிருப்பார்கள். மூடக்கொள்கைகளுடன் முட்டி மோதி, ஜாதிக்கொடுமையை அழித்து ஒழிக்க குரல் கொடுத்தார்.

இவ்வாறு தமிழக முதல்வர் டாக்டர் மு. கருணாநிதி நேற்று சென்னையில் நடந்த சுப்பிரமணியபாரதி நினைவு விழாவில் பேசுகையில் கூறினார்.

இந்த விழாவில் அனைத்துக் கட்சிகளும் பங்குபற்றின. சென்னையில் பாரதியார் சிலை நிறுவுவதற்கான இடத்தை தமிழக அரசு தந்துதவுமென்று முதல்வர் சொன்னார்.

தமிழ அமைச்சர்கள், முன்னாள் தமிழக முதல்வர் திரு. பக்தவத்சலம் உட்பட மற்றும்பலரும் பேசினர்.

# "கூட்டுறவினால் நாட்டை உயர்த்த முடியும்"

குருநகர் ஞாயிறு

கூட்டுறவில் அரசியல் வேறுபாடுகளோ பேதங்களோ இருக்க முடியாது கூட்டுறவினால்தான் இந்த நாட்டை உயர்த்த முடியும் கூட்டுறவுமுறையில் இந்த நாடு முன்னேறிவருவதை நாம் கண்கூடாக காண்கின்றோம் இவைமேலும் மேலும் வளர்ந்தால் நாடும் மக்களும் சுபீட்சமடைய முடியும். இவ்வாறு அண்மையில் வடபகுதிக்கு ஒரு நாள் விஜயம்மேற்கொண்ட சர்வதேச கூட்டுறவுத் திணைக்கள இணை அதிபர் ஜே டி இராஜா அரசாங்கத்தால் கடனாக கொட்டடுக்கப்பட்ட படகு ஒன்றை நாவாந்துறையில் வெள்ளோட்டம் செய்து வைத்து பேசுகையில் குறிப்பிட்டார்.

நாவாந்துறைசென்மேரிஸ் கடலட்டை கூட்டுறவுச் சங்கத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட இவ்வைபவத்தில் திரு இராஜா மேலும் பேசுகையில் உலக கூட்டுறவு இயக்கத்தை ஏற்படுத்தும் நிலை இன்று உருவாகி வருகின்றது. உலகமக்கள் ஒன்று சேரும் கூட்டுறவு இயக்கம் விரைவில் வரும் இதனால் எமது நாடு வளம்பெற வழி பிறக்கும் என்றார்.

...

## பிரதமருக்கு அழைப்பு

கொழும்பு, ஞாயிறு

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் சார்பில் இந்தியாவுக்கு விஜயம் செய்யுமாறு பிரதமர் திருமதி பண்டாரநாயக்காவுக்கு திரு. சுவர்ண்சிங் அழைப்பு விடுத்தார் திருமதி பண்டாரநாயக்கா இவ்வழைப்பை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார்.

(இ. பீ. ஏ.)

## சுவர்ண்சிங்கை சந்திக்கவில்லை

கொழும்பு, ஞாயிறு

இலங்கைப் பிரஜாவுரிமை கிடைக்காமல் நிராகரிக்கப்பட்ட இந்திய வம்சாவழியினர் பிரச்னைகள் குறித்து இந்திய வெளிநாட்டமைச்சர் திரு சுவர்ண் சிங்கை இலங்கை திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு மணவைத் தம்பி சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்த எடுத்த முயற்சிகள் பலனளிக்கவில்லை

திரு சுவர்ண்சிங்கை அவர் சந்தித்துப் பேசுவதற்கான வாய்ப்பு ஏற்படவில்லை.

(இ பீ ஏ)

### கவிப்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலா 454.85 சதம் பெறும் 100 ஆறுதல் பரிசுடிக்கட்டுகள் விபரம் வருமாறு

| | |
|---|---|
| 22 A 0475 | 22 A 0538 |
| 33 A 0918 | 05 B 0162 |
| 05 B 0402 | 09 B 0750 |
| 12 B 0068 | 18 B 0414 |
| 33 B 0172 | 12 C 0090 |
| 37 C 0799 | 07 D 0143 |
| 10 D 0960 | 11 D 0613 |
| 15 D 0125 | 11 E 0980 |
| 19 E 0565 | 19 E 0905 |
| 13 E 0162 | 11 F 0345 |
| 30 F 0334 | 31 F 0978 |
| 34 F 0518 | 37 F 0828 |
| 18 G 0627 | 24 G 0104 |
| 12 H 0580 | 21 H 0715 |
| 02 J 0270 | 07 J 0550 |
| 28 J 0402 | 40 J 0330 |
| 03 K 0393 | 15 K 0645 |
| 18 K 0294 | 13 L 0601 |
| 09 M 0513 | 21 M 0213 |
| 25 M 0149 | 28 M 0559 |
| 29 M 0998 | 35 M 0172 |
| 03 N 0267 | 18 N 0596 |
| 19 N 0539 | 22 N 0308 |
| 30 N 0726 | |
| 03 O 0634 | 15 O 0245 |
| 29 O 0519 | 30 O 0725 |
| 35 O 0222 | 39 O 0329 |
| 05 P 0356 | 08 P 0839 |
| 12 P 0272 | 17 P 0049 |
| 37 P 0105 | 02 Q 0721 |
| 20 Q 0116 | 26 Q 0182 |
| 34 Q 0830 | 37 Q 0237 |
| 03 R 0618 | 04 R 0473 |
| 05 R 0451 | 09 R 0050 |
| 36 R 0241 | 39 R 0335 |
| 29 R 0134 | 10 S 0757 |
| 32 S 0435 | 35 S 0062 |
| 36 S 0111 | 10 T 0432 |
| 11 T 0482 | 20 T 0316 |
| 13 T 0369 | 30 T 0404 |
| 10 U 0725 | 35 U 0431 |
| 05 V 0845 | 20 V 0412 |
| 17 V 0239 | 21 V 0861 |
| 25 V 0226 | 30 V 0282 |
| 30 V 0908 | 12 W 0095 |
| 17 W 0087 | 33 W 0292 |
| 11 X 0539 | 25 X 0932 |
| 32 X 0472 | 06 Y 0137 |
| 16 Y 0489 | 04 Z 0121 |
| 28 Z 0045 | 29 Z 0701 |
| 30 Z 0145 | |

(இவை யாவும் உறுதிப்படுத்தப்பட வேண்டியவை)

......

## தேசியமயம்

கோட்டை, ஞாயிறு

தனியார் மருத்துவ சிகிச்சை ஒழிக்கப்படும். எல்லா வைத்தியர்களும் தேசிய சுகாதாரத் திட்டமொன்றின் கீழ் கொண்டுவரப்படுவர்.

இப்புதிய திட்டத்தைச் சுகாதார அமைச்சர் திரு டபிள்யு பி ஜி ஆரியதாச வெளியிட்டுள்ளார்.


# ராதா குரு பற்பொடி

பற்களை வெண்மையாக்கி வாய் நாற்றத்தைப் போக்கி, பற்களுக்கு பூரணமான பாதுகாப்பளிக்கிறது. பல்வலி, பல் அரணை, முரசு கரைதல், வாய்நாற்றம் முதலிய பல் சம்பந்தமான நோய்களுக்கு நிவாரணமளிக்கும்.

எங்கும் கிடைக்கும்.

ராதா குருபற்பொடி என்று கேட்டு வாங்குங்கள்

தயாரிப்பாளர்கள்:
"ராதா புரடக்ஸ்"

ஏக விநியோகஸ்தர்கள்:
எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி
(மருந்துகள், மருந்துச் சரக்குகள், வாசனதிகள் வியாபாரம்.)

53, காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 541

'பாலேந்திரா பில்டிங்'
160, செட்டியார் தெரு,
கொழும்பு-11

## மணிவாக்கு

பெரிய விஷயங்களைப் போலவே சிறிய விஷயங்களையும் கவனிக்கக்கூடிய மனமே உண்மையும் உரமும் பொருந்திய மனமாகும்.

—ஜான்சன்—

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

[illegible] விரோதிகிருது வருஷம் ஆவணி மாதம் 28-ந் திகதி (13-9-71)

# இலங்கை - இந்திய பொருளாதார ஒத்துழைப்பு

இலங்கை - இந்திய பொருளாதார ஒத்துழைப்பு, ஆசியப்பிராந்திய அமைதி இந்துசமுத்திரப்பகுதியின் பாதுகாப்பு, கிழக்கு வங்காள நிலைமை, இந்திய-சோவியத் ஒப்பந்தம் எனப் பல்வேறு முக்கிய பிரச்னைகள் பற்றியும் இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்திவிட்டு இந்திய வெளிவிவகார அமைச்சர் சர்தார் சுவரண்சிங் நாடுதிரும்பியிருக்கிறார். சர்தார் சுவரண்சிங் இலங்கை வருகிறார் என்ற செய்திவெளிவந்ததுமே இங்கு சிலர் அபாயச்சங்கு ஊதினர். அவர்கள் பூச்சாண்டிகாட்டியபடி எதுவும் நடந்துவிடவில்லை. பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவும் சர்தார் சுவரண்சிங்கும் பேச்சுவார்த்தையின் முடிவில் வெளியிட்ட கூட்டறிக்கையில் கூட இந்தியாவின் அகதிகள் பிரச்னை பற்றித்தான் குறிப்பிடப்பட்டுள்ளதே யொழிய கிழக்குப்பாகிஸ்தான் என்றோ 'வங்காள தேசம்' என்ற பதமோ குறிப்பிடப்படவில்லை யென்பது கவனத்துக்குரியது. கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள பல வேறு விஷயங்களையும் பத்திரிகைகளுக்குச் சர்தார் சுவரண்சிங் அளித்த பேட்டிகளில் தெரிவித்த கருத்துக்கள் பற்றியும் பின்னர் ஆராயலாம். இலங்கை-இந்திய பொருளாதார ஒத்துழைப்பு இருநாடுகளுக்குமிடையிலான வர்த்தக உறவு ஆகியவைகளில் சர்தார் சுவரண்சிங்கின் வருகை பயனளித்திருக்கிறதா என்பது முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டும்.

இலங்கை - இந்திய வர்த்தகம் ஒருவழிப்பாதையாகவே இருந்துவருகிறதென்றும் எப்பொழுது இருநாடுகளுக்குமிடையில் வர்த்தகப் பேச்சு நடந்தாலும் இந்தியா தனக்குச் சாதகமாக்கிக் கொள்வதே வழக்கமென்றும் கூறப்படுவதுண்டு. சர்தார் சுவரண்சிங்கும் பிரதமரும் பேச்சுவார்த்தையின்பின் வெளியிட்ட கூட்டறிக்கையில் 'இலங்கையின் உற்பத்திப் பொருள்களைக் கூடுதலாக வாங்குவதற்கு இந்தியா முனையும்' என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது. இது இங்கு சிறிது ஏமாற்றத்தைக் கொடுக்கக்கூடும். ஆனாலும் இந்தியாவும் இலங்கையும் இங்கு கூட்டாகத் தொழில்துறைகளை ஆரம்பிப்பதற்கு இணங்கியிருப்பதும் அத்துறைகள் உற்பத்திசெய்யும் மேலதிகப் பொருள்களைக் கொள்வனவுசெய்வதற்கு இந்தியா இணங்கியிருப்பதாலும் 1969-ம் ஆண்டில் அமைக்கப்பட்ட கைத்தொழில் வர்த்தக கூட்டு உபகுழுக்களை ஒன்றாக இணைப்பதென்றும் இந்த உபகுழு அடிக்கடி கொழும்பில் கூடிப்பேசவேண்டுமென்பது ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதாலும் இலங்கையின் உற்பத்திப் பொருள்களை இந்தியா கூடுதலாக வாங்கக்கூடிய வாய்ப்பு அதிகமிருக்கிறதென்ற நம்பிக்கைக்கு இடமுண்டு.

கைத்தொழில் விவசாய யந்திர சாதனங்களும் உபகரணங்களும் இந்தியாவிடமிருந்து வாங்குவதற்கு இலங்கை இணங்கியிருக்கிறது. இது இந்தியாவுக்கு மட்டுமல்ல இலங்கைக்கும் பலவழிகளிலும் நன்மையானதே. இலங்கையருக்கு இந்தியாவில் தொழில்நுட்பப் பயிற்சியளிக்கவும் இந்தியா ஒப்புக்கொண்டிருக்கிறது, இவைதவிர இலங்கைக்கு புதிதாக ஆறுகோடி ரூபா கடன் வசதியும் இந்தியா அளித்திருக்கிறது.

இந்திய - இலங்கைப் பொருளாதார வர்த்தக ஒத்துழைப்பில் சர்தார் சுவரண்சிங்கின் வருகை புதிய அத்தியாயம் ஒன்றை உருவாக்கியிருக்கிறதென்றே சொல்லவேண்டும், இலங்கையுடன் நட்புறவுடன் வாழவேண்டுமென்ற ஆர்வம் இந்தியாவுக்கு இருக்கிறது. இருநாடுகளுக்குமிடையிலான இந்தப் பொருளாதார வர்த்தக ஒத்துழைப்பு ஆசியநாடுகளுக்கிடையில் பொருளாதார வர்த்தக ஒத்துழைப்பையும் தொடர்பையும் வலுப்பெறச்செய்து ஆசியாவின் முன்னேற்றத்துக்கும் அமைதிக்கும் வழிவகுக்க உதவுவதாக இருக்குமென நம்புவோம்.

## பேரிழப்பு

கொழும்பு, ஞாயிறு 'தணிகைமணி செங்கல்வராய பிள்ளை தம்வாழ்வின் இறுதிவரை தமிழ்உலகுக்கும் ஆன்மீக உலகுக்கும் ஒளியூட்டும் பெருமகனாக விளங்கினார். தேவார திருவாசக, திருக்கோவை, திருப்புகழ் ஒளிநெறிக் கட்டுரைகளை அவர் நூல்வடிவில் தந்தவர். அவரது மறைவு பேரிழப்பாகும்' இவ்வாறு இலங்கை மத்திய வங்கித் தமிழ் இலக்கியமன்றம் தணிகைமணி செங்கல்வராயபிள்ளையின் மறைவுகுறித்து அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

## ஆசிரியர்சங்க உத்தியோகஸ்தர்

யாழ்ப்பாணம், திங்கள் அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழ் ஆசிரியர் சங்க யாழ் கிளையின் புதிய உத்தியோகஸ்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு எம். இரத்தினசிங்கம், உபதலைவர்கள் திரு அ. முதலித்தம்பி திரு அ. பொன்னம்பலம், செயலாளர்: திரு ச. கதிரவேலு உபசெயலாளர்கள் திரு எஸ் குணசிங்கம் திரு என். ஐயாத்துரை. பொருளாளர் திரு வி. கே. தங்கராசா உபபொருளாளர், திரு பி. ஏரம்பு.

## உலகவலம்

### ஜப்பானின் பத்திரிகைத் துறை

டோக்கியோ. ஜப்பானின் பத்திரிகைத்துறை ஆசியாவிலேயே புகழ்பெற்றது. 515 தினசரிகள் இங்கு வெளியாகின்றன. தினம் 5 கோடியே 30 லட்சம் பத்திரிகைகள் விநியோகிக்கப்படுகின்றன.

மற்றும் ஆசிய நாடுகள் எதிலாவது இந்த அளவுக்குப் பத்திரிகைத் துறை வளர்ச்சியடையவில்லை.

குறைந்த அளவில் தொழிலாளர்களைப் பயன்படுத்தி நவீனமுறைகளை அனுசரித்து இங்கு பத்திரிகைத் தொழில் நடைபெறுவதே அதன் துரித வளர்ச்சிக்குக் காரணமாகும். விநியோக வாகனங்கள் விரைவாகப் பத்திரிகைகளை நாட்டின் எந்த மூலைமுடுக்குகளுக்கும் கொண்டுசென்று விநியோகிக்கத் தக்கவாறு நல்ல தரமுடையவை.

மேலும் பத்திரிகை விநியோகம் செய்யும் பையன்கள் தங்கள் தொழிலில் மேலும் அறிவை விருத்திசெய்து கொள்ளத் தக்கவகையில் அவர்களுக்குப் புலமைப் பரிசில்கள் வழங்கப்படுகின்றன. இதைவிடப் பத்திரிகைத்துறையில் கையாளப்படும் சிக்கன முறைகளும் ஜப்பானிய பத்திரிகைத்துறை வளர்ச்சிக்கு முக்கியமான காரணமாகும்.

0 0 0

### பழையநிலையில் தளர்ச்சி

போன். இன்று மேற்கு ஜெர்மனியில் பழையநிலை தளர்ச்சியடைகிறது. இதை அங்கு இருப்பவர்களும், செல்பவர்களும் காணக்கூடியதாகவிருக்கிறது.

1968-ம் ஆண்டிலிருந்து இங்கு பொருளாதாரம் நல்ல வளர்ச்சியடைந்திருந்தது. தற்போது இவ்வளர்ச்சி குறைய ஆரம்பித்துள்ளது. 20 லட்சம் பிறநாட்டவர்கள் இங்கு தொழில்புரிகிறார்கள். முன்னர் இல்லாதிருந்த வேலையில்லாப் பிரச்னை தற்போது சிறிது சிறிதாகத் தலைதூக்க ஆரம்பித்துள்ளது.

இவற்றால் நாடு பெரும் மாற்றத்துக்குள்ளாகி வருகிறது. கம்பெனிகளின் நிர்வாகமும் இச்சமூக மாற்றத்துக்குக் காரணமாகும். தொழிற்சங்கங்கள் கேட்டதையெல்லாம் கொடுக்க இவை தயாராகவிருப்பதால் அரசாங்கத்துக்குக் கிடைக்கும் கம்பனிகளின் லாபம் பெரிதும் குறைந்தே காணப்படுகிறது.

0 0 0

### கடும் சட்ட நடவடிக்கை

சூரிச். சுவிற்சர்லாந்து, ஒற்றறிபவர்களின் மேல் கடும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கிறது.

அரசியல் இராணுவத் துறையில் உளவுவேலை பார்ப்பவர்கள் மேல் மட்டுமன்றி கைத்தொழில் நிறுவனங்களிலும் இந்த வேலையில் ஈடுபடுபவர்கள் மீது நடவடிக்கையெடுக்கப்படுகிறது;

சுவிஸ்வங்கி இரகசியங்களை வெளியிடுதல், நாட்டிலுள்ள நிறுவனங்களது அல்லது அரசாங்கத்தினது இரகசியங்களை உளவறிந்து பிறநாட்டுக்கு தகவல்கொடுத்தல் கைத்தொழில் இரகசியங்களை வெளியிடுதல் போன்ற பல குற்றங்களுக்கு கடும் சட்ட நடவடிக்கையை சுவிஸ் அரசாங்கம் இக் குற்றங்களைப் புரிபவர்கள் மேல் எடுக்கிறது"

## மல்லாவி கற்பழிப்பு வழக்கு

# கத்தியும் 50 ரூ. நோட்டும் கோர்ட்டில் காட்டப்பட்டது

மட்டுவில், திங்கள் இருபத்தேழுவயது நிரம்பிய நான்குபிள்ளைகளுக்குத் தாயான ஒரு பெண்ணைக் கற்பழித்ததாக மல்லாவியைச் சேர்ந்த தகரை என்றழைக்கப்படும் இரத்தினம் என்பவருக்கு எதிராகத் தொடரப்பட்டவழக்கு நேற்றுசாவகச்சேரி நீதிமன்றத்தில் மாஜிஸ்திரேட் திரு ஜே ஜி ஆசிர்வாதம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது. விசாரணை ஆரம்பமாகமுன்னர் நீதிபதி பார்வையாளர்கள் மத்தியிலிருந்த சிறுவர்களை நீதிமன்றத்தைவிட்டு வெளியே போகும்படி உத்தரவிட்டார்

மல்லாவியைச் சேர்ந்த செல்லத்துரையின் மனைவி மாரியாயி அழுதழுது சாட்சியமளிக்கையில் எதிரியான இரத்தினம் கத்தியைக்காட்டி மிரட்டி நன்பகல்வேளையில் காட்டினுள் இழுத்துசென்று எதிரிகட்டியிருந்த சாரத்தை வாயினுள் திணித்து இருதடவைகள் கற்பழித்ததாகவும் இரண்டாம்தடவை கற்பழிக்கும்போது 50 ரூபா நோட்டு ஒன்றைத் தருவதாக நீட்டியதாகவும் தம்மைத் தேடி தமது சகோதரியும் வேறு சிலரும் ஸ்தலத்துக்கு வந்தபோது எதிரி ஓட்டம் பிடித்ததாகவும் கூறினார்

இப்பெண்ணிடம் காட்டி மிரட்டியதாகக் கூறப்படும் கத்தியும், இரண்டாம் முறை கற்பழிக்கும் போது பெண்ணிடம் நீட்டிய 50 ரூபா நோட்டும் கோர்ட்டில் காண்பிக்கப்பட்ட போது "கத்தியின் நுனி முறிந்திருக்கிறதா" என்று கேட்டு அந்தபெண் கத்தியை அடையாளம் காட்டினார்.

எதிரி சார்பில் வழக்கறிஞர் எவரும் ஆஜராகவில்லை நீதிபதி வழக்கை இம்மாதம் 21-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## 'அங்கீகாரம் சர்வதேச விவகாரம்'

- சுவர்ண

கொழும்பு, ஞாயிறு "வங்காளதேசத்தை அங்கீகரிப்பது பற்றி எங்களுக்கு எதுவித எதிர்ப்புமில்லை நேரம் காலம் வரும்பொழுது வங்காளதேச மக்களுக்கு உதவியாகவிருக்கும் வேளையில் நாங்கள் ஆதரிப்போம். மேலும் அங்கீகாரம் என்பது சர்வதேச விவகாரமாகும்"

பத்திரிகையாளர் மாநாட்டில் வங்காளதேசத்தை இந்தியா அங்கீகரித்துவிட்டதா என்ற கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் சுவரண்சிங் மேற்கண்டவாறு கூறினார்

வங்காளதேசப் பிரச்னை ஜனநாயகத்துக்கும் சர்வாதிகாரத்துக்கும் இடையேயுள்ள பிரச்னையெனவும் அவர் இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டார். (சி பி ஏ)

## சிறுமியைக் கடத்தினாராம் சிறுவன்!

குருநகர், ஞாயிறு 13 வயது மாணவியை கடத்திச் சென்றதாக 14 வயது நிரம்பிய இளைஞர் ஒருவர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

நல்லூர் கல்வியன்காட்டைச் சேர்ந்த 14 வயது நிரம்பிய இளைஞன் அதே இடத்தைச் சேர்ந்த 13 வயது மாணவியைக் கடத்திச் சென்றதாகவும் சம்பந்தப்பட்ட பெண்ணின் பெற்றோர் தேடுதல்செய்த இடத்தில் இருவரும் செல்வச்சந்நிதியில் நிற்பதாகக் கிடைத்த தகவலின் பேரில் அங்கு பொலிசார் இருவரையும் கைதுசெய்ததாகவும் தெரியவந்தது

......

## இன்று ஜெயந்தி விழா

உருத்திரபுரம், திங்கள் மகாதேவா ஆச்சிரமத்தில் மகாதேவசுவாமிகள் ஜெயந்தி விழாவும், ஆச்சிரம 14வது ஆண்டு விழாவும் இன்று நடைபெறுகிறது. மாலை நிகழ்ச்சியில் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி "கைலைக்காட்சி" என்னும் பொருள்பற்றி உரைநிகழ்த்துவர்.

---

யாழ்ப்பாணம், ஞாயிறு வல்வை சிதம்பரக் கல்லூரி ஆசிரியர் திரு சு சாந்தமூர்த்தியின் திடீர் மறைவு குறித்து மேற்படி கல்லூரி மண்டபத்தில் ஓர் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது.

......

## டாக்டர்களுக்கு தடை

கோட்டை. ஞாயிறு வெளிநாடு சென்று டாக்டர்கள் வேலை பார்ப்பதற்கு அரசாங்கம் அனுமதி மறுத்துள்ளது. கடந்த சிலமாதங்களாக 300க்கும் மேற்பட்ட டாக்டர்கள் ஆபிரிக்கா கனடா மேற்கு ஜெர்மனி ஆகிய நாடுகளில் வேலைபெற்றுச் சென்றுள்ளதாகத் தெரியவந்துள்ளது தமது 5 வருட சேவையை அரசாங்கத்திற்கு அளிக்கு முன்பே சிலர் தம் பதவியிலிருந்து விலகிச்செல்வதாகவும் தொடர்ந்து 5 வருடம் சேவையாற்றிய பின்பும் இவர்கள் இனி வெளிநாடுசெல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள் எனவும் சுகாதார அமைச்சைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சு பொதுமக்களுக்கு கட்டாய வைத்திய சேவையை மேற்கொள்ளவிருப்பதினால் ஒவ்வொரு டாக்டரும் தனது படிப்பு முடிந்து 5 வருடம் கட்டாயமாக அரசுக்குச் சேவை செய்யவேண்டுமாம்.

## விற்பனைக்கு

EY 4538 நல்ல நிலையிலுள்ள A 40 சோமசெற் கார் விற்பனைக்கு அல்லது மாற்றத்துக்கு. விபரங்களுக்கு: பத்திரதாசன் [illegible] நிலையம், ஆச்சுவேலி.

3325

இப்பத்திரிகை "ஈழநாடு லிமிட்டெட்" ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.